செய்தி வெளியீடு எண்: 257/2018 நாள்: 27.04.2018

**மாவட்ட கனிம அறக்கட்டளை நிதியினை குவாரிகளால் பாதிக்கப்பட்ட கிராமங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த பயன்படுத்துவது குறித்த மண்டல அளவிலான கலந்தாய்வு கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைப்பெற்றது.**

வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் குவாரிகளால் பாதிக்கப்பட்ட கிராமங்களில் மாவட்ட கனிம அறக்கட்டளை நிதியினை கொண்டு அடிப்படை வசதிகளை மேம்படுத்துவது குறித்து வேலூர் கடலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களை சார்ந்த கனிம வளத்துறை அலுவலர்கள் மற்றும் குவாரி உரிமையாளர்களுக்கான மண்டல அளவிலான கலந்தாய்வு கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைப்பெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது:-

மாண்புமிகு பாரத பிரதமர் மற்றும் இந்திய கனிமம் மற்றும் சுரங்கத்ததுறையால் இந்தியாவில் உள்ள குவாரிகள் மற்றும் சுரங்கங்கள் அமைந்துள்ள கிராமங்களில் இதனால் ஏற்படும் பாதிப்புகளை களைந்து பொதுமக்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்திட கனிம அறக்கட்டளை நிதியினை முறையாக பயன்படுத்திட அனைத்து உரிமைகளும் குழுவிற்கு வழங்கப்பட்டு பல்வேறு நடவடிக்கைகளை எடுக்கப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் இன்று இந்த மண்டல அளவிலான கலந்தாய்வு கூட்டம் நடைப்பெறுகிறது. குவாரிகள் அமைந்துள்ள கிராமங்கள் மற்றும் பகுதிகளில் உள்ள உள்ளாட்சிகளில் அடிப்படை வசதிகள் குடிநீர், உயர்மட்ட நீர்தேக்க தொட்டி, மருத்துவ வசதி, சாலை வசதி, கல்வெட், பள்ளி கட்டிடங்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான நலத்திட்ட உதவிகள், இளைஞர்களுக்கான திறன் வளர்ப்பு பயிற்சி போன்ற பல்வேறு வசதிகளை அறக்கட்டளை நிதியினை பயன்படுத்தி மேம்படுத்தலாம். வேலூர் மாவட்டத்தில் குவாரி குத்தகைதாரர்கள் செலுத்திய சீனியரேஜ் தொகையில் வசூலிக்கப்பட்ட கனிம அறக்கட்டளை நிதி ரூ.2 கோடி வரை பெறப்பட்டுள்ளது. இத்தொயைில் ரு 10 இலட்சம் வரை குவாரிகளால் பாதிக்கப்ட்ட வாலாஜா வட்டம் முசிறி கிராமம் ஆற்காடு வட்டம் திமிரி கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மருத்துவ உபகரணங்கள் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கிராம மேம்பாட்டு திட்டம் என்ற திட்டத்தின் மூலம் அடுத்த 5 ஆண்டுகளுக்கு வளர்ச்சி பணிகள் குறித்து திட்ட அறிக்கை அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் இந்த திட்டத்திலும் இந்நிதியை பயன்படுத்த ஆலோசித்து வருகிறோம்.

இந்த கனிம அறக்கட்டளை நிதியினை இந்தியாவில பல்வேறு மாநிலங்களிலும் குவாரி அமைந்துள்ள கிராமங்களின் வளர்ச்சிக்கு செயல்படுத்தி வருகிறது. தமிழகத்தில் போதிய விழிப்புணர்வு பொதுமக்களுக்கும் குவாரி உரிமையாளர்களுக்கும் ஏற்படுத்தி குவாரிகளால் பாதிக்கப்பட்ட கிராமங்களின் வளர்ச்சிக்கு பயன்படுத்தி அப்பகுதி மக்களின் முன்னேற்றத்திற்கு உதவிட இக்கூட்டத்தில் கலந்துக்கொண்டுள்ளவர்கள் ஆலோசனைகளை பெற்று செயல்படுத்திட நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இக்கூட்டத்தில் இணை இயக்குநர் புவியியல் மற்றும் சுரங்கத்துறை திரு.சின்னமருது, இந்திய அரசின் மாநில திட்ட கண்காணிப்பாளர் திருமதி.பியூலா, துணை இயக்குநர் கனிம வளம் திருமதி.விஜயலட்சுமி (கடலூர்), உதவி இயக்குநர்கள் கனிம வளம் திரு.ரமேஷ்குமார் (வேலூர்), திரு.பெருமாள்ராஜ் (காஞ்சிபுரம்), திருமதி.மைதிலி (திருவண்ணாமலை) மற்றும் கனிம அறக்கட்டளையின் மேலாண்மை குழு உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் கிராம நிர்வாக அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், வேலூர்-9.

for